நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.5, திருநெல்வேலி.

**முன்னிலை: திரு. V. முரளிதரன் பி.பி.ஏ., பி.எல்.,**

**நீதித்துறை நடுவர் எண்.5, திருநெல்வேலி.**

2024–வது வருடம், ஜீலை மாதம், 11–ம் நாள் வியாழக்கிழமை

<u>ஆண்டிப்பட்டிகை விசாரணை வழக்கு எண். **1805/2023**</u>

(**CNR No.** TNTL 04– 027042–2023)

| | | |
|---|---|---|
| குற்ற முறையீட்டாளர் | – | அரசுக்காக காவல் உதவிஆய்வாளர்<br>முன்னீர்பள்ளம் காவல்நிலையம்<br>திருநெல்வேலி<br>குற்ற எண். 210/2023 |

**// எதிர்//**

| | | |
|---|---|---|
| எதிரி | – | ரமேஷ் (எ) ராமசாமி வயது 33/21<br>த/பெ. ஆறுமுகம்<br>பெருமாள் கோவில் சன்னதி தெரு,<br>கோபாலசமுத்திரம் |
| குற்றம் சாட்டப்பட்டது | – | 341, 294(b), 323, 506(ii)இதச பிரிவுகளின் கீழ் குற்றம் சாட்டப்பட்டது. |
| குற்றச்சாட்டு வனையப்பட்டது | – | 341, 294(b), 324, 506(ii) இதச பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டது |
| தீர்மானம் | – | எதிரியின் மீது இதச பிரிவுகள் 341, 294(b), 324, 506(ii)–ன் படி குற்றவாளி இல்லை என நீதிமன்றம் முடிவு செய்து குவிமுச பிரிவு 248(1)–ன் கீழ் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| புகார் நாள் | – | 08.06.2023 |

| | | |
|---|---|---|
| எதிரி கைது செய்யப்பட்ட நாள் | _ | எதிரி முன்பிணை பெற்றதால் கைது செய்யப்படவில்லை. |
| பிணையில் சென்ற நாள் | _ | 19.06.2023 |
| கோப்புக்கு எடுக்கப்பட்ட நாள் | _ | 19.07.2023 |
| விசாரணை தொடங்கப்பட்ட நாள் | _ | 30.05.2024 |
| விசாரணை முடிக்கப்பட்ட நாள் | _ | 08.07.2024 |
| தீர்ப்புரை நாள் | _ | 11.07.2024 |

இவ்வழக்கு 19.072023ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டும், 08.07.2024 இறுதி விசாரணை முடிக்கப்பட்டும், அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றவியல் உதவி வழக்கறிஞர் நிலை 2 திரு. மைகேல்ஜெரால்டு அவர்களும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. S.கோதண்டராமன் அவர்கள் முன்னிலையாகி இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளை கேட்டும், சாட்சி சான்றாவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.

## தீர்ப்புரை

### 1) அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்

**1(1)** கோபாலசமுத்திரத்தில் குடியிருந்து வரும் அசா–1 துரைப்பாண்டியின் 2–வது மகள் பாரதியை உறவினரான எதிரி ரமேஷ் தகராறு செய்ததால் 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அவர் மீது புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்யப்பட்டதால் முன்பகை இருந்து வந்த நிலையில் 08.06.2023 அன்று 10:15 மணிக்கு அசா–1 துரைப்பாண்டி தனது இருசக்கரவாகனத்தில் கோபாலசமுத்திரம் ஊரில் அமைந்துள்ள பெருமாள் கோவில் தெருவில் உள்ள வெங்கட்ராமர் ஐயர் உயர்நிலைப் பள்ளி அருகே வந்த போது எதிரி ராமையா (எ) ரமேஷ் கையில் கம்புடன் வந்து அவரது இருசக்கரவாகனத்தை வழிமறித்து

அவரைப் பார்த்து 'ஆத்தாளை கிடக்க அம்மையையொழி நீ புகார் கொடுத்து என்ன மயித்தை பிடிங்கிட்டாய் செருக்கியுள்ள உன் குடும்பத்தை கேவலப்படுத்துவேன் நீ எங்கு வேண்டுமானாலும் போ' என அசிங்கமாக பேசி கம்பால் அசா–1 துரைப்பாண்டியன் தலையின் இடது பக்கம் ஓங்கி அடித்து ரத்த காயம் ஏற்படுத்தியதால் அவரது அலறல் சத்தம் கேட்டு அந்த வழியாக வந்த அவரது தம்பி பிரம்மநாயகம், மனைவி கமலா ஆகியோர் ஓடி வரவும் எதிரி அசா–1 துரைப்பாண்டியை பார்த்து 'உன்னைக் கொல்லாமல் விடமாட்டேன்' என மிரட்டி சென்றுவிட்டார் என்றும், பின்பு அசா–1 துரைப்பாண்டி காவல் நிலையம் சென்று புகார்மனு கொடுத்துவிட்டு திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தார் என்றும்,

**1(2)** 08.06.2023 அன்று 12:30 மணிக்கு தலைமை காவலர் மரியதாஸ் காவல் நிலைய பொறுப்பில் இருந்த போது அசா–1 துரைப்பாண்டி நிலையத்தில் முன்னிலையாகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும், இந்த வழக்கை உதவி ஆய்வாளர் துரை புலன் விசாரணை செய்து சம்பவ இடம் சென்று பார்வையிட்டும் சம்பவ சாட்சிகள் அனைவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும் எதிரி திருநெல்வேலி அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்று சென்றதால் அவரை கைது செய்யாமல் இத்துடன் தனது புலன் விசாரணை முடித்து எதிரிக்கு எதிராக இதச பிரிவுகள் 341, 294(b), 323, 506(2) ஆகியவற்றின் கீழ் குற்றம் புரிந்துள்ளதாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என அரசு வழக்கு அமைந்துள்ளது.

**2)** எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு, அதன் பேரில் எதிரி ஆஜரானதும் அவருக்கு வழக்காவணங்களின் நகல்கள் கு.வி.மு.ச 207 ன் படி இலவசமாக வழங்கப்பட்டது.

**3)** வழக்கு ஆவணங்களின் நகல்களை எதிரிக்கு படித்து பார்க்க போதுமான அவகாசம் வழங்கப்பட்டு கு.வி.மு.ச.173–ன் கீழ் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பரிசீலனை செய்தும், நீதிமன்றத்தில் எதிரி 30.05.2024 அன்று முன்னிலையான போது குற்றம் குறித்து இருதரப்பும் கேட்கப்பட்டது. எதிரியின் மீது குற்றச்சாட்டு வனைய அடிப்படையான முகாந்திரம் இருந்த காரணத்தினால் எதிரியின் மீது கு.வி.மு.ச.240ன் கீழ்க்கண்டவாறு குற்றச்சாட்டு வனையப்பட்டு விளக்கி கேட்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1–வது குற்றம் | எதிரி மீது | 08.06.2023 அன்று காலை 10.15 மணிக்கு சம்பவ இடத்தில் எதிரி அசா–1 துரைபாண்டியை சட்டத்திறகு புறம்பாக வழிமறித்ததாக இதச பிரிவு 341–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் இழைத்ததாகவும், |
| 2–வது குற்றம் | எதிரி மீது | மேற்படி சம்பவத்தில் எதிரி அசா–1 துரைபாண்டியை பார்த்து ஆத்தாளை கிடக்க அம்மையையொழி நீ புகார் கொடுத்து என்ன மயித்தை பிடிங்கிட்டாய் செருக்கியுள்ள என அசிங்கமாக பேசியதாக இதச பிரிவு 294(b)–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் இழைத்ததாகவும், |
| 3–வது குற்றம் | எதிரி மீது | மேற்படி சம்பவத்தில் எதிரி அசா–1 துரைபாண்டியை கம்பால் தலையின் இடது பக்கம் ஓங்கி அடித்து காயம் ஏற்படுத்தியதாக இதச பிரிவு 324–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் இழைத்ததாகவும், |
| 4–வது குற்றம் | எதிரி மீது | மேற்படி சம்பவத்தில் எதிரி அசா–1 துரைபாண்டியை பார்த்து உன்னை கொல்லாமல்விடமாட்டேன் என கொலை மிரட்டல் செய்ததாக இதச பிரிவு 506(2)–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் இழைத்ததாகவும், |

**எதிரியின் பதிலுரை:** எதிரி குற்றவாளி இல்லை என மறுத்துரைத்தார், ஆகவே மேற்படி குற்றச்சாட்டு குறித்து விசாரணை செய்ய அரசு தரப்பு சாட்சிகளுக்கு உத்தரவிடப்பட்டது.

**4)** அரசு தரப்பில் மொத்தம் 03 சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், 06 சான்றவாணங்களும் குறியீடு செய்யப்பட்டு அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது,

**<u>5) சாட்சியங்கள் மூலம் தெரியவரும் அரசு வழக்கு</u>**

**5(1)** எதிரி தனது மைத்துனரின் மகன் என்றும், சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு தான் இருசக்கரவாகனத்தில் வந்த போது கீழே விழுந்ததில் தனது இடது பக்க நெற்றியில் சிறுகாயம் ஏற்பட்டு திருநெல்வேலி மருத்துவமனையில் சிகிச்சை இருந்தபோது அங்கு வந்த போலீசார் தன்னிடம் எழுதாத பேப்பரில் கையொப்பம் மட்டும் வாங்கி சென்றார்கள் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள அசாஆ–1 கையொப்பம் மட்டும் தன்னுடையது என அசா–1 துரைப்பாண்டி சாட்சியம் அளித்துள்ளார்.

**5(2)** வழக்கு சம்பவம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என அசா–2 கமலா சாட்சியம் அளித்துள்ளார்.

**5(3)** கடந்த 08.06.2024 அன்று 12:30 மணிக்கு தலைமை காவலர் மரியதாஸ் காவல் நிலைய பொறுப்பில் இருந்த போது அசா–1 துரைப்பாண்டி முன்னிலையாகி கொடுத்த அசாஆ–2 புகார்மனுவை பெற்று அதன் அடிப்படையில் அசாஆ–3 முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்துள்ளார் என்றும் இந்த வழக்கை உதவி ஆய்வாளர் துரை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அன்றைய தினமே புகார்தாரர் துரைப்பாண்டியை விசாரித்தும், 13:30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் ராஜகோபால், கணபதி ஆகியோர்கள் முன்னிலையில் அந்த இடத்தை பார்வையிட்டு அசாஆ–4 பார்வைமகஜர், அசாஆ–5 வரைபடம் தயார் செய்தார் என்றும், சாட்சிகள் அனைவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், எதிரி திருநெல்வேலி முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றதால் அவரை கைது செய்யவில்லை என்றும், காயம்பட்ட துரைப்பாண்டிக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சிவதாணு அவர்களை

12.07.2023 அன்று விசாரித்து தனது புலன் விசாரணையில் முடிவில் எதிரிக்கு எதிராக இதச பிரிவுகள் 341, 294(b), 323, 506(2) ஆகியவற்றின் கீழ் உதவி ஆய்வாளர் துரை இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என அசா–4 உதவி ஆய்வாளர் கார்த்திக் சாட்சியம் அளித்துள்ளார்.

**6)** இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது. அரசு தரப்பு சாட்சியங்களின் எதிரிக்கு எதிராக தோன்றும் சங்கதிகள் குறித்து எதிரியிடம் குவிமுச 313(1)(ஆ) படி வினவ எதிரி பொய் சாட்சியம் என்றார். மேற்கண்ட எதிரி அரசுதரப்பு சாட்சியங்களை மறுத்து தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை எனவும் கூறினார். இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது.

**7)** அரசு தரப்பில் முன்னிலையான கற்றறிந்த அரசு வழக்கறிஞர் அரசு தரப்பு சாட்சிகள் மூலம் எதிரிக்கு எதிரான குற்றம் நிரூபணம் செய்துள்ளதாகவும், ஆகவே எதிரிக்கு தகுந்த தண்டனை வழங்கும் படியும் வாதிட்டார். எதிரி தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் அரசு தரப்பு சாட்சிகள் மூலம் எதிரியின் மீதான குற்றத்தை நிரூபணம் செய்ய போதுமான வகையில் அமையவில்லை என்றும், அரசு தரப்பு சாட்சியங்களில் உள்ள சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்,

**8) இவ்வழக்கில்** தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் அரசுதரப்பில் சுமத்தப்பட்டுள்ள எதிரி மீது இதச பிரிவுகள் 341, 294(b), 324, 506(ii)–ன் கீழான குற்றமும் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதேயாகும்.

**9) எதிரி மீதான குற்றச்சாட்டு குறித்து நீதிமன்ற பரிசீலனைகள்:**

**9(1)** சம்பவத்தின் போது அசா–1 துரைப்பாண்டியை சட்டத்துக்கு புறம்பாக வழிமறித்து, அசிங்கமாக பேசி, கம்பால் தாக்கி கொலை மிரட்டல் செய்ததாக எதிரிக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

**9(2)** அரசு தரப்பில் எதிரியின் மீதான குற்றத்தை நிரூபணம் செய்ய சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சாட்சியாக அசா–1 துரைப்பாண்டி மற்றும் சம்பவத்தின் நேரடி சாட்சிகளாக அவரது மனைவியான அசா–2 கமலா ஆகியோர் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அதில் அசா–1 துரைப்பாண்டி தனது சாட்சியத்தில், **"சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு தான் இருசக்கர வாகனத்தில் வந்த போது கீழே விழுந்ததில் தனது இடது பக்க நெற்றியில் சிறுகாயம் ஏற்பட்டு திருநெல்வேலி மருத்துவமனையில் சிகிச்சை இருந்தபோது அங்கு வந்த போலீசார் தன்னிடம் எழுதாத பேப்பரில் கையொப்பம் மட்டும் வாங்கி சென்றார்கள்."** என வழக்கு சம்பவம் குறிக்கும் எதிரி தன்னை தாக்கி காயப்படுத்தியது குறித்தும் அரசு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார். அதேபோன்று சம்பவத்தின் நேரடி சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ள அசா–2 கமலா **"வழக்கு சம்பவம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது."** என அரசு வழக்கிற்கு முற்றிலும் முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார்கள்.

**9(3)** அசா–1 துரைப்பாண்டி, அசா–2 கமலா ஆகிய சம்பவ சாட்சிகளின் சாட்சியங்கள் அரசு வழக்கிற்கு முற்றிலும் முரண்பட்டு அமைந்துள்ளதால் அவர்கள் பிறழ் சாட்சிகளாக அறிவிக்கப்பட்டு நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். மேற்படி சாட்சியங்கள் எதிரியின் மீதான குற்றச்செயலை மெய்ப்பிக்க எந்த விதத்திலும் ஆதரவாக அமையவில்லை என்று தெரியவருவதால் நீதிமன்ற பரிசீலனையிலிருந்து ஒதுக்கப்பட்டன. எதிரியின் மீதான குற்றச்சாட்டை மெய்பிக்க அரசு தரப்பில் வேறு சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

**9(4)** இந்த வழக்கில் முக்கிய சாட்சிகளான அசா–1 துரைப்பாண்டி மற்றும் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகளான அசா–2 கமலா ஆகியோர்கள் அரசு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததாலும், வேறு சம்பவச் சாட்சிகள் யாரும் இல்லாத காரணத்தினால் இந்த வழக்கில் பிற வழக்கமான சாட்சிகளான

பார்வைமகஜர் சாட்சிகள் மற்றும் அலுவல் சாட்சிகளான முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர் மரியதாஸ், புலன் விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்த உதவி ஆய்வாளர் துரை ஆகியோர்களை சாட்சிகளாக விசாரிப்பதால் பலன் இல்லை என விசாரிக்கப்படாமல் அரசு தரப்பில் விடுவிக்கப்பட்டுள்ளார்கள். மேலும் காவல் நிலையத்தின் தற்போதைய உதவி ஆய்வாளர் கார்த்திக் அவர்களை கூடுதல் சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டு அதன் அடிப்படையில் உதவி ஆய்வாளர் கார்த்திக் அசா−3 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்.

**9(5)** அசா−1 துரைப்பாண்டியன் காவல் நிலையத்தில் முன்னிலையாகி கொடுத்த புகார் மனுவின் அடிப்படையில் தலைமைக் காவலர் மரியதாஸ் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்துள்ளதாக அசா−3 உதவி ஆய்வாளர் கார்த்திக் சாட்சியம் அளித்து இருந்தாலும், அசா−1 துரைப்பாண்டி தனது சாட்சியத்தில் "**...கீழே விழுந்ததில் தனது இடது பக்க நெற்றியில் சிறு காயம் ஏற்பட்டு திருநெல்வேலி மருத்துவமனையில் சிகிச்சை இருந்தபோது அங்கு வந்த போலீசார் தன்னிடம் எழுதாத பேப்பரில் கையொப்பம் மட்டும் வாங்கி சென்றார்கள் என்றும் தன்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள அசாஆ−1 கையொப்பம் மட்டும் தன்னுடையது.**" என புகார் மனு கொடுத்தது பற்றி அசா−1 துரைப்பாண்டி அரசு வழக்கிற்கும், அசா−3 உதவி ஆய்வாளர் கார்த்திக்கின் சாட்சியத்திற்கும் முற்றிலும் முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சாட்சியங்கள் மூலம் இந்த வழக்கில் புகார்மனு பெறப்பட்டதும் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்ட விதமும் முற்றிலும் சந்தேகத்துக்குரியதாகவே தெரிய வருகிறது.

**9(6)** இந்த வழக்கினை உதவி ஆய்வாளர் துரை புலன் விசாரணை செய்து எதிரிக்கு எதிராக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளது பற்றி அசா−3 உதவி ஆய்வாளர் கார்த்திக் சாட்சியம் அளித்து இருந்தாலும் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்ட விதம் சந்தேகத்துக்கு உரியதாக தோன்றும் நிலையில் அசா−3 உதவி ஆய்வாளர் கார்த்திக்கின் சாட்சியத்திற்கும் ஆதரவாக தனிப்பட்ட

சாட்சிகள் ஏதும் இல்லை என தெரிய வருகிறது. எதிரியின் குற்றச்செயல் குறித்து சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மற்றும் நேரடி சாட்சிகள் யாரும் சாட்சியம் அளிக்காத நிலையில் அலுவல் சாட்சியான அசா–3 உதவி ஆய்வாளரின் சாட்சியம் எதிரியின் மீதான குற்றச்சாட்டை மெய்பிக்க போதிய வகைகள் அமையவில்லை என்றும், அதனைத் தொடர்ந்து எதிரியின் மீதான குற்றச்சாட்டை அரசு தரப்பு சாட்சிகள் அடிப்படையில் நிருபணம் செய்யவில்லை என்று நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**10)** முடிவாக எதிரி இதச பிரிவுகள் 341, 294(b), 324, 506(ii)–ன் கீழ் குற்றவாளி இல்லை என நீதிமன்றம் முடிவு செய்து குவிமுச பிரிவு 248(1)–ன் கீழ் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

**11)** எதிரி ஏற்படுத்திக் கொடுத்துள்ள பிணை பத்திரங்கள் ரத்து செய்தும் உத்தரவிடப்படுகிறது.

**12)** இந்த வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

/என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்து என்னால் சரிபார்க்கப்பட்டு 2024–ம் ஆண்டு ஜீலை மாதம் 11 ம் நாள் இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது/

V MURALITHARAN Digitally signed by V MURALITHARAN Date: 2024.07.11 15:12:45 +0530

நீதித்துறை நடுவர் எண்.5
திருநெல்வேலி.

**1. அரசு தரப்பு சாட்சிகள்**

1. திரு. துரைபாண்டி

2. திரு. கமலா

3. திரு. கார்த்திக் (உதவி ஆய்வாளர்)

**2. அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| வ.எண் | தேதி | சான்றாவணங்கள் |
|---|---|---|
| 1. | 08.06.2023 | புகார்மனுவில் உள்ள அசா–1 துரைபாண்டி என்பவரின் கையொப்பம் |
| 2. | 08.06.2023 | புகார்மனு |
| 3 | 08.06.2023 | முதல்தகவல் அறிக்கை |
| 4. | 08.06.2023 | பார்வை மகஜர் |
| 5. | 08.06.2023 | வரைபடம் |
| 6 | 08.06.2023 | காயச்சான்று |

**3. அரசு தரப்பு சான்று பொருள்: இல்லை**

**4. எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்: இல்லை**

V MURALITHARAN

Digitally signed by V MURALITHARAN
Date: 2024.07.11 15:12:56 +0530

நீதித்துறை நடுவர் எண்.5
திருநெல்வேலி

**பின்குறிப்பு**

1) சாட்சிகள் 3 தினங்களுக்கு மேல் விசாரணைக்காக நிறுத்தி வைக்கப்படவில்லை.

2) சம்மந்தப்பட்ட காவல்துறையினருக்கு தீர்ப்பு குறித்து அறிக்கை அனுப்பப்பட்டது.

3) தீர்ப்பின் நகல் மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது.